[26th March 1969

(எ) மீன்களை உறைய வைத்தல், மேற்குக் கடற்கரையில் பதப் படுத்தி டப்பாக்களில் அடைத்தல், தொழிலில் பல தொழிற்சாலைகள் ஈடுபட்டுள்ளன. இவற்றில் அவர்களுக்கு வேலை கிடைக்கலாம். பச்சை மீன்களையும் பதப்படுத்தி டப்பிகளில் அடைக்கப்பட்ட மீன்களையும் அங்காடி களுக்கு அனுப்பி விற்பனை செய்வதிலும், விசைப்படகுகளின் மூலம் மீன் பிடிப்பதிலும் தங்கள் சொந்த தொழில்களை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ள லாம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தனியார் துறையில் அவர்களுக்கு வேலை கொடுக்கத் தக்க நிலை எப்படியிருக்கிறது? அவர்கள் என்ன வேலை செய்வதற்குக் கொடுக்கிறார்கள் ? அத்தகைய தொழிற்சாலைகள் மீன்பிடித் தொழில் செய்வதற்கு நம் ராஜ்யங் களில் எங்கெங்கு இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார் துறையில் என்னென்ன தொழிற்சாலைகள் எங்கெங்கு இருக்கின்றன என்ற விவரம் இல்லை. அந்தப் படிப்பைப் படிக்கிறவர்களுக்கு, அரசாங்கத்திலுள்ள வேலை வாய்ப்பை விட தனியார் துறையில் மீன் பதனிடும் தொழில் நடத்துவதற்கும் அதில் சேருவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : இவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு எத்தனை பேருக்கு விசைப் படகு வாங்கக் கடன் கொடுத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உணவு அமைச்சரிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும்.

School Manager and Correspondent

* 225 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the qualifications prescribed for the Manager and Correspondent of Educational Institutions according to the rules ;

(*b*) whether it has been brought to the attention of the Government that the Manager of Madurai Workers' Welfare Organisation High School, underwent $1\frac{1}{2}$ years' imprisonment for criminal charges; and

(*c*) if so, the action taken thereon by the Government ?

பள்ளி நிர்வாகி, தொடர்பாளர்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கல்வி ஸ்தாபனங்களின் நிர்வாகியாகவோ **(Manager)** தொடர் பாளராகவோ **(Correspondent)** இருப்பவர்களின் தகுதிகள், விதி முறைப்படி யாவை ?

(இ) மதுரை தொழிலாளர் நல உரிமைக் கழக உயர்நிலைப்பள்ளி நிர்வாகி $1\frac{1}{2}$ வருடங்கள் கிரிமினல் குற்றங்களுக்காக சிறை தண்டனை அனுபவித்தவர் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப் பட்டுள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தொடக்கப்பள்ளிகள் சம்பந் தப்பட்ட விதிகளில் 12-பி விதியின்படி அரசு மானியம் பெறும் தொடக்கப் பள்ளியில் தொடர்பாளர் கற்றறிந்தவராகவும் கல்வி

26th March 1969]

முன்னேற்றத்தில் நாட்டமுள்ளவராகவும் கடன் தீர்வுத் திறனுள்ள வராகவும் இருக்க வேண்டும். அவர். அரசின் அல்லது உள்ளாட்சி மன்றத்தின் முழு நேர ஊழியராக இருக்கக்கூடாது. தமிழ் நாடு கல்வி விதிகளில் இடை நிலைப் பள்ளிகளின் தொடர்பாளர்களுக்கு அத்த கைய தகுதிகள் விதிக்கப்படவில்லை.

(இ) ஆம். 1944-ல்.

(உ) விதிகளின் கீழ் நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி நிர்வாகிகளுக்குக் குறைந்த பட்ச தகுதி அமைக்கப்படாததன் காரணமாகக் குற்றங்களுக்கு உட்பட்டவர்கள், பல லட்ச ரூபாய்கள் மானியங்களைக் கையாடல் செய்யும் நிலைமை எல்லாம் ஏற்படுகிறது. நான் குறிப்பிட்டுள்ள தொழிலாளர் நல உரிமைக் கழக உயர்நிலைப் பள்ளியில், நிர்வாகியினுடைய தவறின் காரணமாக, தவருன போக்கினுல், அங்கே மாணவர்கள் அமைதியின்மை, ஆசிரியர்கள் அமைதியின்மை, போராட்டம் போன்றவைகள் எல்லாம் நடைபெறுவதை அரசாங்கம் அறிந்திருக்கும். ஆகையால் அவற்றைத் தவிர்க்கும் வகையில் என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுக்க உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விதிகள் இல்லாததால் திருட வேண்டுமென்பதில்லை. இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் அவர் தவறு செய்து விட்டார். அதனுல் குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப் பட்டிருக்கிருர். நம்முடைய விதிமுறைகளில் (Grants-in-aid Board) மூலமாகப் பள்ளிகளுக்கு உதவி செய்கிருேம். பணம் கொடுப்பதற்கு உரிமை இருக்கிறதே தவிர, இது போன்ற தவறுகள் நடைபெறும் போது, அதில் தலையிடுவதற்கு தற்போது போதுமான விதிகள் இல்லை என்று நானே உணருகிறேன். அதை மாற்றி அமைக்க ஒரு குழு அமைக்கத் தனியார் துறை பள்ளிகளுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நினைக்கிருேம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தால், கிராண்டை நிறுத்தலாம். ஆனுல் அப்படிச் செய்வதால், மாணவர்கள் படிப்பு பாதிக்கப்படும். ஆகையால் அந்த மாதிரி எதுவும் நடக்காமல் நிர்வாகத்தை சீரமைக்கும் வகையில், சில மாற்றங்கள் வேண்டுமென்று அவைகளை ஆய்வதற்கு ஒரு குழு அமைக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

The Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956

* 217 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of cases pending as on 1st June 1968, among the cases filed under the Madras Cultivating Tenants' (Payment of Fair Rent) Act, 1956; and

(*b*) the reason therefor ?

நியாயவாரச் சட்டம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில் நியாய வாரச் சட்டத்தின் கீழ் **[The Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956]** தொடரப்பட்ட வழக்குகள் 1—6—1968 அன்றுள்ளவாறு எத்தனை முடிவுருமல் இருக்கின்றன ?

(ஆ) காரணம் என்ன ?